## சுருக்கம்

பள்ளிக்கல்வி - பொது நூலகங்கள் – 2022-2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஒருங்கிணைப்பில் சர்வதேச அளவில் பல்துறை நிபுணர்கள், அறிவியல் ஆய்வாளர்கள் மற்றும் புகழ்பெற்ற அறிஞர்களின் உரைகள் நிகழ்த்துதல் - TN talk என்ற நிகழ்ச்சி ஒவ்வொரு ஆண்டும் நடத்த நிருவாக அனுமதி – இத்திட்டத்தினை இவ்வாண்டு செயல்படுத்த ரூ.37,50,000/-க்கு நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வித் (பொ.நூ.2) துறை**

அரசாணை (நிலை) எண்.118 | நாள் 30.06.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது, ஆனி 16

படிக்கப்பட்டவை:

1. 2022 - 2023ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கை வரிசை எண்.30இல் மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு.
2. பொது நூலக இயக்குநரின் கடிதத்தினை ந.க. எண்.2763/உ_3/ 2022, நாள் 19.05.2022.

--------

**ஆணை:-**

சட்டமன்றப் பேரவையில் 2022-2023ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் 11.04.2022 அன்று ஏனையவற்றுடன் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:-

அறிவிப்பு எண்.30 - TN talk

"அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஒருங்கிணைப்பில் சர்வதேச அளவில் பல்துறை நிபுணர்கள், அறிவியல் ஆய்வாளர்கள் மற்றும் புகழ்பெற்ற அறிஞர்களின் உரைகள் மிகச்சிறந்த தொழில்நுட்பம் மற்றும் அரங்க அமைப்புடன் TN talk என்ற பெயரில் நிகழ்த்தப்படும். இணையம் வாயிலாக உலகெங்கும் உள்ள தமிழர்களைச் சென்றடையும் வகையில் இத்திட்டம் ரூ.37.50 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்."

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, பொது நூலக இயக்குநர் தனது கடிதத்தில், கீழ்க்காணும் விவரங்களை தெரிவித்துள்ளார்:-

(i) தமிழ்நாட்டில் பொது நூலகங்களின் வாயிலாக மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் அறிஞர்கள் அனைவரும் பயன்பெறும் வண்ணம், தேசிய மற்றும் சர்வதேச அளவில் சிறந்து விளங்கும் பல்துறை நிபுணர்கள், அறிவியல் ஆய்வாளர்கள் மற்றும்

// த.பி.பா.//

புகழ்பெற்ற அறிஞர்களின் உரைகள் அண்ணா நூற்றாண்டு நூலக ஒருங்கிணைப்பில் மிகச்சிறந்த தொழில்நுட்பம் மற்றும் அரங்க அமைப்புடன் "TN talk" என்ற பெயரில் தொடர் நிகழ்வாக நடத்தப்படும்.

- "TN talk" நிகழ்வானது ஆண்டிற்கு 25 நிகழ்வுகள் நடைபெறும்.
- ஒவ்வொரு நிகழ்வும் மிக முக்கிய தலைப்பில் குறிப்பிட்ட மையக்கருத்துக்களைக் கொண்டதாக அமையும்.
- தனித்துவம் மிக்க இந்த நிகழ்வு மிகச்சிறந்த பேச்சாளர்கள், துறை சார்ந்த வல்லுநர்கள் கொண்டு நடைபெறும்.
- இந்த நிகழ்விற்கு இலக்கியம், பொருளாதாரம், கல்வி. தொல்லியல், மருத்துவம், அறிவியல் போன்ற ஒவ்வொரு துறை சார்ந்த புகழ்பெற்ற மிகச் சிறந்த ஆளுமைகள் அழைக்கப்படுவார்கள்.
- இந்நிகழ்வானது புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், அரசு நிறுவனங்களுடன் இணைந்து நடைபெறும்.
- இந்நிகழ்வு தமிழ்/ஆங்கிலம் வழி நடைபெறும்.
- நிகழ்வுக்கான அமைவிடம் நிகழ்வின் தனித்தன்மைகேற்ப வடிவமைக்கப்படும்.
- ஒவ்வொரு நிகழ்வும் ஆரம்பம் முதல் இறுதி வரை கட்டமைக்கப்பட்ட அட்டவணையின் படி நடைபெறும்.
- நிகழ்வுகள் அனைத்தும் குறிப்பிட்ட கால இடைவெளியில் நடைபெறும்.

(ii) இத்தொடர் நிகழ்வானது குறிப்பிட்ட கால இடைவெளியில் நடைபெறுவதற்கு தகுந்த வகையில் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு, நிகழ்வானது அனைத்து அச்சு & காட்சி ஊடகங்கள், சமூக ஊடகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பகிரப்படும்.

(iii) TN talk நிகழ்ச்சியை விரும்பும் மக்கள் அனைவரும் எந்த நேரத்திலும் எவ்விடத்திலிருந்தும் கண்டு பயனடையும் நோக்கில், இந்நிகழ்வுகள் அனைத்தும் முழுமையாக நேரலையாக இணைய வழியில் ஒளிப்பரப்பப்படும். அனைத்து நிகழ்வுகளும் உரிய முறையில் எடிட்டிங் செய்யப்பட்டு பொது நூலக இயக்ககத்தின் YouTube சேனலில் பதிவேற்றம் செய்து பொது வெளியில் வெளியிடப்படும்.

(iv) "TN talk" என்ற நிகழ்வானது பொது நூலக இயக்குநர் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழு அமைத்து செயல்படுத்தப்படும். இக்குழுவானது கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ளும்:-

(அ) நிகழ்வுகளுக்கான வல்லுநர்கள் தேர்வு செய்தல், மற்றும் நிகழ்வின் கட்டமைப்பு வடிவமைத்தல்.

(ஆ) ஒவ்வொரு நிகழ்விற்கும் தனித்துவமான தலைப்பினை தேர்வு செய்தல்.

(இ) நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வல்லுநர்களுக்கு உத்தேச பயணத்திட்டங்கள் மற்றும் உறைவிட வசதிகளை ஏற்படுத்துவதற்கான ஆலோசனை வழங்குதல்.

(ஈ) நிகழ்விற்கான அரங்கத்தினை வடிவமைத்தல்.

// த.பி.பா.//

(v) கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு "TN talk" ஒரு நிகழ்ச்சி நடத்துவதற்கான உத்தேச செலவினம் ரூ.1,50,000/- வீதம் 25 நிகழ்ச்சிகளுக்கு ரூ.37,50,000/- (ரூபாய் முப்பத்தேழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவினம் ஏற்படும் என பொது நூலக இயக்குநர் தெரிவித்துள்ளார்:

| வ. எண் | விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1. | நிகழ்வின் வல்லுநர் தங்குவதற்கான செலவு உணவு மற்றும் சிற்றுண்டி செலவினம் | ரூ.20,000/- |
| 2. | போக்குவரத்து செலவினம் | ரூ.30,000/- |
| 3. | மதிப்பூதியம் | ரூ.50,000/- |
| 4. | மேடை அலங்காரம் & வடிவமைப்பு | ரூ.35,000/- |
| 5. | விடியோ ரிக்கார்டிங் எடிட்டிங் உட்பட இதர செலவினம் | ரூ.15,000/- |
| | **மொத்தம்** | **ரூ.1,50,000/-** |

3. மேலும், பொது நூலக இயக்குநர் தனது கடிதத்தில், 2022-2023ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்திடும் பொருட்டு, "TN talk" ஒரு நிகழ்ச்சி நடத்துவதற்கான உத்தேச செலவீனம் ரூ.1,50,000/- வீதம் 25 நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான உத்தேச செலவினம் ரூ.37,50,000/-ஐ அரசு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து வழங்குமாறும் TN talk நிகழ்ச்சியினை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நடத்துவதற்கு தக்க அரசாணை வழங்குமாறும் பொது நூலக இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. பொது நூலக இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2022-2023ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட "TN talk" என்ற அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக, பின்வருவனவற்றிற்கு அனுமதி வழங்கி ஆணையிடுகிறது:-

(i) TN talk நிகழ்ச்சியினை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நடத்துவதற்கான அனுமதி.

(ii) TN talk என்ற நிகழ்ச்சியினை நடத்த பொது நூலக இயக்குநர் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழு அமைத்து செயல்படுத்த அனுமதி.

(iii) TN talk ஒரு நிகழ்ச்சி நடத்துவதற்கான உத்தேச செலவினமாக ரூ.1,50,000/- வீதம் 25 நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான மொத்த செலவினம் ரூ.37,50,000/-ற்கு (ரூபாய் முப்பத்தேழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்:-

"2205 00 – கலையும் பண்பாடும் – 105 பொது நூலகங்கள் – மாநிலச் செலவினங்கள் – AY அண்ணா நூற்றாண்டு நூலகம் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.

IFHRMS: த.தொ.கு. 2205 00 105 AY 309 03"

//த.பி.பா.//

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதி ரூ.37,50,000/-ம் 2022-23ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள பொது நூலக இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இருப்பினும் சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறும் பொருட்டு, ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி (SI) இச்செலவினம் 2022-23ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும். இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2022-23ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates 2022-23) சேர்க்கத் தக்க வகையில் உரிய விவரங்களுடன் நிதி(கல்வி-II/வ.செ.பொது-I)த் துறைக்கு அனுப்புமாறு பொது நூலக இயக்குநர், சென்னை – 2 கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.307/ADS(GKT)/கல்வி-II/2022. நாள் 30.06.2022இல் பெற்றப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.0551 (ஐந்நூற்று ஐம்பத்து ஒன்று), (IFHRMS ASL No.2022060551).

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ), சென்னை - 2.
மாநில கணக்காயர், சென்னை – 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை - 35.

**நகல்:-**
அரசு முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, சென்னை-9.
நிதி (கல்வி-II/வரவு செலவு பொ-I/II/வ.வ.I)த் துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை - 9.
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர், சென்னை – 9.
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை-9.
பள்ளிக்கல்வித் (வரவு செலவு)துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
30/06/2022